உ
சிவமயம்

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

# அமுதசுரபி அறிவொளி

## காலாண்டு மலர்



# சைவசமய வினாவிடை

(க.பொ.த.சாதாரணதர வகுப்புக்குரியது)

ஆக்கியோன்:
A.S.இராதாக்கிருஷ்ணன் B.A Dip in Edu
(ஆசிரிய ஆலோசகர்)

வெளியீடு:
சைவமுன்னேற்ற சங்கம்
வத்துகாமம்.

மலர் 1
இதழ் 1

உ
சிவமயம்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# அமுதசுரபி அறிவொளி

## காலாண்டு மலர்

# சைவசமய வினாவிடை

(க.பொ.த.சாதாரணதர வகுப்புக்குரியது)

ஆக்கியோன்:
A.S.இராதாக்கிருஷ்ணன் B.A Dip in Edu
(ஆசிரிய ஆலோசகர்)

01.06.2003

வெளியீடு:
சைவமுன்னேற்ற சங்கம்,
56/1, மாத்தளை வீதி, வத்துகாமம்.

# அமுதசுரபி அறிவொளிக்குள் புகுமுன்.............

"தொட்ட அனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்ற அனைத்தும் ஊறும் அறிவு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் திருவாக்குக்கு அமைய மாணவச் செல்வங்களே! கற்க வேண்டியது எதுவோ அதனை உரிய பராயத்தில் தக்க விதத்தில் கற்றுத் தேறுவது உங்கள் கடமை. வாழ்வுக்கு கல்வியானது எத்துணை தூரம் அவசியமானதோ, அதற்கு ஈடாக ஒழுக்கமும் அமைகின்றது. ஒழுக்கமில்லாத கல்வி பாழ். ஒழுக்கத்துடன் கற்று உயரும் வாழ்வு நிலையே அகிலத்தாரால் பெரிதும் விரும்பப்படும். பெரியோர்கள், மாகான்களின் வாழ்வுச் சரிதம் அதனையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. ஒழுக்கத்தினை அளிக்கவல்லது சமயக்கல்வி. சமயக்கல்வி மனிதனை நேரிய பாதையில் வழிநடத்தி, மானிட இலக்கினை உரிய வகையில் அடையவழி காட்டுவது. மாணவர்களின் சமய அறிவினையும், ஒழுக்கசீலப் பண்புகளையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் "அமுதசுரபி அறிவொளி" என்னும் கல்வி மலர் காலாண்டு மலராக கல்வி உலகில் கால் பதிக்கின்றது. க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம், கலைமுதற் தேர்வு, கலைபட்டப்படிப்பு வகுப்புக்களில் கற்கும் மாணவர்களின் சமயகல்வி அறிவினை விருத்தி செய்வதும் இம்மலரின் பிறிதொரு நோக்கமாகும். ஒவ்வொரு காலாண்டுகளிலும் மேற்குறித்த ஒரு வகுப்பினை அடிப்படையாகக் கொண்டு பாடவிடயங்கள் அமையவுள்ளன. மாணவ உலகம் இதனை நன்கு பயன்படுத்தி தம் கல்வியில் மேலும் உயர்வு காணவேண்டும் என்பது எம் அவா! கற்று பயன்பெறுமாறு அன்புடன் வேண்டி, மீண்டும் மறு இதழில் சந்திக்கும் வரை விடைபெறுகின்றேன்.

-ஆசி-

# க.பொ.த.சாதாரண தர வகுப்புக்குரியது

(புதிய பாடத்திட்டத்திற்கமைய)

# சைவசமயம் – I

❖ **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. விநாயகரின் வடிவம் உணர்த்தும் தத்துவம்.
(அ) ஐந்தொழில்கள் (ஆ) ஆணவ அடக்கம்
(இ) பஞ்சபூத தத்துவம் (ஈ) 'ஓம்' என்ற பிரணவப் பொருள்

02. 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் ...........' என்ற தேவாரப் பாடலில் குறிப்பிடப்படும் கடவுள்
(அ) விநாயகர் (ஆ) முருகப் பெருமான்
(இ) சக்தி (ஈ) நடராஜர்

03. யாகங்களைச் செய்வதே தெய்வங்களை திருப்தி செய்வதற்குரிய சிறந்த வழியெனக் கூறுவது
(அ) சங்கிதைகள் (ஆ) பிராமணங்கள்
(இ) ஆரணியங்கள் (ஈ) உபநிடதங்கள்

04. சைவ சமயத்தவர்க்குத் தனிச் சிறப்பு வாய்ந்த உபநிடதம்.
(அ) கட உபநிடதம் (ஆ) சுவேதாஸ்வர உபநிடதம்
(இ) ஐதரேய உபநிடதம் (ஈ) பிரசின உபநிடதம்

05. அருச்சுனனுக்கு கண்ணபிரான் செய்த உபதேசம்
(அ) பகவத் கீதை (ஆ) சிவரகசியம்
(இ) ஆகமம் (ஈ) நற்சிந்தனை

06. ஈழத்தில் தேவாரப் பதிகம் பாடப்பட்ட சிறப்பைப் பெற்ற தலங்கள்
(அ) திருக்கேதீஸ்வரம், நகுலேச்சரம்
(ஆ) திருக்கோணேச்சரம், முன்னேஸ்வரம்
(இ) திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம்
(ஈ) திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்

07. முன்னேஸ்வர ஆலயத்தின் தலவிருட்சம்
(அ) அரசமரம் (ஆ) கல் ஆலமரம்
(இ) மருத மரம் (ஈ) கொக்கட்டி மரம்

08. "சங்கமர்" என்ற சிவனடியார்கள் பூசை செய்யும் தலம்
(அ) ஒட்டுசுட்டான் (ஆ) கொக்கட்டிச் சோலை தான்தோன்றியீச்சரம்
(இ) கதிர்காமம் (ஈ) செல்வசந்நிதி

09. பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் நைமித்திய கிரியை
(அ) மகாமகம் (ஆ) பிரமோற்சவம்
(இ) சங்காபிஷேகம் (ஈ) மகோற்சவம்

10. இறைவனது பரந்துபட்ட பேராற்றலும் பேரருளும் விக்கிரகத்தில் குடிகொண்டிருக்கும் தன்மை
(அ) திருவருள் (ஆ) சாந்நித்தியம்
(இ) திருவுருவம் (ஈ) பிரதிமை

11. ஈழத்து சிதம்பரம் எனச் சிறப்பித்தழைக்கப்படும் தலம்
(அ) பொன்னம்பலவாணேச்சர ஆலயம் (ஆ) திருக்கேதீஸ்வரம்
(இ) சந்திரசேகரம் (ஈ) காரைநகர் சிவன் கோயில்

12. சுந்தரர் கையிலையில் பெருவாழ்வை மீண்டும் பெற்ற தினம்
(அ) வைகாசி மூலம் (ஆ) சித்திரைச் சதயம்
(இ) ஆடிச் சுவாதி (ஈ) ஆனி மகம்

13. அருண்மொழித் தேவர் என்ற இயற்பெயர் கொண்டவர்
(அ) சேக்கிழார் (ஆ) கச்சியப்பா
(இ) திருமூலர் (இ) நாவலர்

14. அறிவித்தால் அறியும் பொருள் எனப்படுவது
(அ) பதி (ஆ) பசு (இ) பாசம் (ஈ) பரமாத்மா

15. "தம்பிரான் தோழர்" எனச்சிறப்புப் பட்டத்தினைப் பெற்றவர்
(அ) சுந்தரர் (ஆ) அப்பர் (இ) சம்பந்தர் (ஈ) மாணிக்கவாசகர்

16. சித்தாந்த அட்டகம் செய்தருளியவர்
(அ) மெய்கண்ட தேவர் (ஆ) அருணந்திச் சிவாச்சாரியார்
(இ) உமாபதி சிவாச்சாரியார் (ஈ) மறைஞான சம்பந்தர்

17. பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்(கு) அறிவென்ற பேர் நன்றற
இப்பாடலில் புந்தி எனக்குறிப்பிடப்படுவது
(அ) ஆன்மா (ஆ) பாசம் (இ) பதி (ஈ) மலங்கள்

18. திருமுறைகளை முறைப்படி பண்ணோடு ஓதுபவர்கள்
(அ) இசைஞானிகள் (ஆ) நடனக்கலைஞர்
(இ) ஓதுவார்கள் (ஈ) வேதியர்

19. பஞ்ச தோத்திரங்கள் ஓதும் முறை
(அ) தேவாரம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், திருவாசகம்
(ஆ) தேவாரம், திருப்பல்லாண்டு, திருவிசைப்பா, திருவாசகம், பெரியபுராணம்
(இ) தேவாரம், பெரியபுராணம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
(ஈ) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்

20. திருத்தாண்டகம் செய்தருளியவர்
(அ) திருஞான சம்பந்தர் (ஆ) திருநாவுக்கரசர்
(இ) சுந்தரமூர்த்தி நாயனார் (ஈ) மாணிக்கவாசகர்

21. தமிழ் ஆகமம் எனச் சிறப்பித்தழைக்கப்படும் நூல்
(அ) திருமுறைகள் (ஆ) திருமந்திரம்
(இ) திருப்புகழ் (ஈ) திருப்புராணம்

22. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு அடங்கும் முறை
(அ) பத்தாம் திருமுறை (ஆ) எட்டாம் திருமுறை
(இ) நாலாம் திருமுறை (ஈ) ஒன்பதாம் திருமுறை

23. "நத்தார்படை ஞானன் பசு வேறிந்தனை கவிழ்வாய்" என்ற தேவாரம் அமைந்த பண்
(அ) நட்ட பாடை (ஆ) காந்தார பஞ்சமம் (இ) கொல்லி (ஈ) நட்டராகம்

24. திருவுருவங்களைச் செதுக்குபவனையும் திருவுருவங்களை வார்ப்பவனையும் எவ்விதம் அழைப்பர்

(அ) ஆச்சாரியர் (ஆ) வேதியர்
(இ) ஸ்தபதி (ஈ) பொற்கொல்லர்

25. அந்நியர் ஆட்சிக் காலத்தில் சைவ உணர்வினை காத்து நின்ற கடவுள் எனவும், கிராமியக் காவற் தெய்வம் எனவும் கருதி மக்களால் வழிபாடு செய்யப்பட்ட தெய்வம்

(அ) வீரபத்திரர் (ஆ) சண்டேஸ்வரர் (இ) ஐயனார் (ஈ) வைரவர்

26. வடக்கில் பிதிர்கடனைச் சிறப்பாக நிறைவேற்றும் தலமாக நகுலேஸ்வரம் விளங்குவது போல கிழக்கிலங்கையில்,

(அ) கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீச்சுவரர் ஆலயம்
(ஆ) வெருக்கல் சித்திர, வேலாயுத சுவாமிகள் ஆலயம்
(இ) மண்டூர் முருகன் கோயில்
(ஈ) மாமாங்க பிள்ளையார் ஆலயம்

27. இலங்கையில் முதன் முதலாக ஸ்ரீ சக்கர பூசை இடம்பெற்ற தலம்

(அ) தெல்லிப்பளை துர்க்கை அம்மன்
(ஆ) நயினை நாகபூசனி அம்மன்
(இ) மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
(ஈ) திருகோணமலை பத்திர காளி அம்மன்

28. சுதர்சன மூர்த்தி வீற்றிருக்கும் தலம்

(அ) வண்ணார் பண்ணை பெருமாள் கோயில்
(ஆ) திருகோணமலை விஷ்ணு ஆலயம்
(இ) பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயில்
(ஈ) வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

29. திருமணக் கிரியையில் பெண்ணின் தந்தை வெற்றிலை பாக்கு பொன் முதலான பொருட்களோடு பெண்ணின் கையை மணமகனுடைய கையிற் கொடுத்து நீரை வார்த்து தத்தம் செய்யும் கடமை

(அ) கன்னிகாதானம் (ஆ) பஞ்சகௌவியம்
(இ) அக்கினி காரியம் (இ) நவக்கிரக பூஜை

30. முதலாம் ஆண்டுத்திதி அல்லது சிரார்த்தத்துக்கு முன்பு நாற்பத்தைந்தாம் நாள் முதல் ஒவ்வொரு மாதத்திலும் செய்யப்படுவது
(அ) மகாளயம் (ஆ) அந்தியேட்டி (இ) சபிண்டீகரணம் (ஈ) மாசியம்

31. சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்
(அ) சைவம் (ஆ) வைணவம் (இ) சாக்தம் (ஈ) கௌமாரம்

32. தமிழ் வேதம் எனச் சிறப்பித்தழைக்கப்படுவது
(அ) திருக்குறள் (ஆ) பைபிள் (இ) தேவாரம் (ஈ) திருவாசகம்

33. "அதிமதுரச் சுத்த சைவ செந்தமிழ் நூல்" என நாவலரால் போற்றப்பட்ட சைவ இலக்கிய நூல்
(அ) இராமாயணம் (ஆ) கந்தபுராணம் (இ) பெரியபுராணம் (ஈ) திருமந்திரம்

34. "தொண்டர் சீர் பரவுவார்" எனப் போற்றப்படுபவர் யார்?
(அ) சேக்கிழார் (ஆ) நாவலர் (இ) திருமூலர் (ஈ) கச்சியப்பர்

35. பறாளை விநாயகர் பள்ளு என்ற சைவ பிரபந்தத்தை இயற்றியவர்
(அ) சோமசுந்தரப் புலவர் (ஆ) நாவலர் பெருமான்
(இ) சின்னத்தம்பிப் புலவர் (ஈ) ஞானப்பிரகாசர்

36. "ஐந்தாம் குரவர்" எனச் சிறப்பித்தழைக்கப்படுபவர்
(அ) சம்பந்தர் (ஆ) சுவாமி விபுலானந்தர்
(இ) நாவுக்கரசர் (ஈ) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

37. "பிரபோத சைத்தன்யர்" என்ற பிரம்மச்சரிய நாமத்திற்குரியவர்
(அ) நாவலர் (ஆ) சுவாமி விபுலானந்தர்
(இ) நாவுக்கரசர் (ஈ) ஸ்ரீ ராமகிருஷ்ணர்

38. "நற்சிந்தனை" என்ற ஞான உபதேசங்களைச் செய்தருளியவர்
(அ) யோகர் சுவாமிகள் (ஆ) நவநாத சித்தர்
(இ) சித்தானைக் குட்டி சுவாமிகள் (ஈ) பெரியானைக்குட்டி சுவாமிகள்

39. விரத அனுட்டானங்களை மானிடர் மேற்கொள்வதால் கிடைக்கும் அனுகூலம்
(அ) மனத்தூய்மை ஏற்பட்டு இறையருள் கிட்டும்
(ஆ) பொழுது போக்கைச் சிறப்பாக கழிக்கலாம்
(இ) மனமகிழ்ச்சி ஏற்படும்
(ஈ) நற்செயலை மேற்கொள்ளலாம்

40. உலகில் மனிதாபிமானமும், மனித நேயமும் குன்றிப் போவதற்கான காரணம்
(அ) மக்கள் தத்தம் மத அனுட்டானங்களை வெறியாகக் கடைப்பிடித்தல்
(ஆ) மத விடயங்களைச் சரியான முறையில் பின்பற்றல்
(இ) பிற மதங்களையும் மதவிதி முறைகளையும் மதித்து நடத்தல்
(ஈ) மக்கள் தத்தம் மத விடயங்களையும் அனுட்டானங்களையும் உரிய முறையில் கடைபிடித்து நடக்காமையும் மதித்து நடக்காமையும்

41. ஓங்கார வடிவினனாக விளங்கும் கடவுள்
(அ) விநாயகப் பெருமான் (ஆ) முருகப் பெருமான்
(இ) மகாவிஷ்ணு (ஈ) வைரவப் பெருமான்

42. சைவசமய வழிபாட்டு முறைகளில் இடம்பெறும் புனிதநீராடல் (தீர்த்தமாடுதல்) அரசு முதலிய மரங்களை வழிபடுதல், நந்தியை, நாகபாம்பினை வழிபாடு செய்தல் என்பன
(அ) வேதகால மக்களின் சமய வழிபாடுகளில் இடம்பெற்றிருந்தன.
(ஆ) சிந்துவெளி நாகரீக கால மக்களின் சமயவழிபாடுகளில் இடம்பெற்றிருந்தன
(இ) சங்ககாலத் தமிழ்மக்களின் சமய வழிபாடுகளில் இடம்பெற்றிருந்தன.
(ஈ) பிற சமயங்களின் செல்வாக்கினால் சைவசமயத்தினுள் புகுந்து கொண்டன.

43. "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் ........." எனக் குறிப்பிடப்படும் நூல்
(அ) சிவஞானபோதம் (ஆ) திருமந்திரம் (இ) பெரியபுராணம் (ஈ) திருவருட்பயன்

44. மாயா காரியங்கள் எனப்படுபவை
(அ) பதி, உயிர், உலகு
(ஆ) சத்து, அசத்து, சதசத்து
(இ) சரியை, கிரியை, யோகம், ஞானம்
(ஈ) தனு, கரண, புவன, போகங்கள்

45. "செங்கணானும் பிரம்மனுந் தம்முள்ளே எங்குந் தேடியுந் திரிந்தவர் காண்கிலார்" என்ற பாடலடியில் "செங்கணான்" எனக் குறிப்பிடப்படும் கடவுள்
(அ) திருமால் (ஆ) பிரமன் (இ) சிவபிரான் (ஈ) வைரவமூர்த்தி

46. "வேதசிரசு" எனச் சிறப்பித்துக் கூறப்படுவது
(அ) ஆரணியங்கள் (ஆ) தேவாரம் (இ) ஆகமம் (ஈ) உபநிடதங்கள்

47. இந்து மதத்தின் பொது நூல், சிறப்பு நூலாக அமைபவை
(அ) தேவாரம், திருவாசகம் (ஆ) வேதம் பன்னிரு திருமுறைகள்
(இ) ஆகமம், பரசுருதி (ஈ) வேதம், ஆகமம்

48. பஞ்சலக்கணங்களைப் பற்றிக் கூறும் நூல்
(அ) தமிழ் மொழிப் புராணங்கள் (ஆ) சிவரகசியம்
(இ) மகாபுராணங்கள் (ஈ) சைவசித்தாந்தம்

49. திருநீற்றை உடம்பில் தரித்துக் கொள்வதற்கான இருமுறைகள்
(அ) பஞ்சாங்கம், அட்டாங்கம் (ஆ) தீட்சை, அனுட்டானம்
(இ) வடகலை, தென்கலை (ஈ) உத்தூளனம், திரிபுண்டரம்

50. சமண சமயத்தை மேற்கொண்டிருந்த கூன் பாண்டியனை மீண்டும் சைவ சமயத்திற்கு கொண்டுவரும் பொருட்டுத் திருஞானசம்பந்தப் பெருமானைப் பாண்டி நாட்டுக்கு வரவழைத்த அம்மையார்
(அ) மங்கையர்க்கரசியார் (ஆ0 திலகவதியார்
(இ) புனிதவதியார் (ஈ) காரைக்காலம்மையார்

51. "வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதிய" புனித நூல்கள்
(அ) தேவாரமும், திருவாசகமும்
(ஆ) திருவாசகமும், திருக்கோவையாரும்
(இ) திருக்குறளும், திருப்புகழும்
(ஈ) திருமந்திரமும், திருவிசைப்பாவும்

52. இறைவனைத் தோழனாகப் பாவித்து வழிபடும் சக மார்க்கத்தில் நின்று முத்தி பெற்றவர்
(அ) திருஞானசம்பந்தர் (ஆ) திருநாவுக்கரசர்
(இ) சுந்தரமூர்த்தி நாயனார் (ஈ) மாணிக்கவாசகர்

53. “ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்” இக்கூற்றினை மொழிந்தவர்
(அ) திருஞானசம்பந்தர் (ஆ) திருநாவுக்கரசர்
(இ) மாணிக்கவாசகர் (ஈ) சுந்தரமூர்த்தி நாயனார்

54. ஒன்பது தந்திரங்களையும், மூவாயிரம் பாடல்களையும் கொண்டமைந்த திருமுறை நூல்
(அ) திருப்புராணம் (ஆ) திருவிரட்டைமணிமாலை
(இ) திருவெம்பாவை (ஈ) திருமந்திரம்

55. “தண்ணளி வெண்குடை .........” என்ற பாடல் தொடக்கத்தில் எந்த நகரின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.
(அ) திருவாரூர் (ஆ) சீர்காழி (இ) மதுரை (ஈ) சிதம்பரம்

56. ஆன்மாவானது
(அ) முற்றறிவுடையது (ஆ) சிற்றறிவுடையது
(இ) தானாக எதையும் அறிய வல்லது
(ஈ) அறிவித்தாலும் அறியமாட்டாதது.

57. சிருஷ்டி, திதி, சங்காரம் என்பன முறையே
(அ) பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் எனப்பொருள்படும்.
(ஆ) பதி, பசு, பாசம் எனப்பொருள்படும்.
(இ) படைத்தல், காத்தல், அழித்தல் எனப்பொருள்படும்.
(ஈ) படைத்தல், அருளல், மறைத்தல் எனப்பொருள்படும்.

58. கண்ணுக்குப் புலனாகாது மறைந்து நின்று உயிருக்கு உதவிசெய்து வந்த திருவருள் உயிர் பக்குவ நிலையை அடையும்போது, அதனை ஆட்கொள்ளும் பொருட்டு எடுக்கும் கண்ணாற் காணக்கூடிய வடிவம்
(அ) தெய்வவடிவம் (ஆ) குருவடிவம் (இ) சக்திவடிவம் (ஈ) இறைவடிவம்

59. பயன்கருதி இறைவனுக்குச் செய்யும் பூசை
(அ) நிட்காமிய பூசை எனப்படும். (ஆ) காமியபூசை எனப்படும்.
(இ) நைமித்திய பூசை எனப்படும். (ஈ) திருவனந்தல் எனப்படும்.

60. “இறைவன், உலகு உயிர்கள் என்பவற்றோடு கலப்பினால் ஒன்றாகியும், பொருட்டன்மையால் அவற்றின் வேறாயும், செலுத்தும் தன்மையால் அவற்றோடு உடனாயும் இருக்கின்றான் எனக் கொள்வது
(அ) வேதாந்தம் (ஆ) அத்துவிதம்
(இ) உபநிடதம் (ஈ) சைவசித்தாந்தம்

61. திருவுருவங்கள் யாவும் சிற்ப சாத்திர விதிமுறைகளுக்கு அமையவாக இயற்றப் பெற்றிருப்பின் அதனை,
(அ) படைப்புச்சிற்பம் என்பர். (ஆ) சித்ராபாசம் என்பர்.
(இ) சித்தார்த்தம் என்பர் (ஈ) சித்திரம் என்பர்.

62. சாத்வீக குணவியல்புடன் மூஷிக வாகனத்தில் வீற்றிருக்கும் கணபதி
(அ) பால கணதி (ஆ) தருண கணபதி
(இ) சிருஷ்டி கணபதி (ஈ) பக்தி கணபதி

63. “தனக்குத் தானே மகனாகிய தத்துவன்” என்ற தணிகைப் புராணக் கூற்றுப்படி முருகன்
(அ) சிவபிரானினின்றும் வேறுபட்ட கடவுள் என்பது புலப்படுத்தப்படுகிறது.
(ஆ) முருகப்பெருமான் சிவராபினின்றும் தாழ் நிலையுடைய கடவுள் என்பது
(இ) முருகப்பெருமானிலும் பார்க்க சிவபிரான் உயர்ந்தவர் என்பது
(ஈ) முருகப்பெருமான் சிவபிரானினின்றும் வேறுபட்டவர் அல்லர் என்பது

64. “பரமனை மதித்திடாப் பங்கயாசனன் ஒரு தலை கிள்ளியே யொழிந்த வானவர்.......” என்ற பாடலடியில் பங்கயாசனன் எனக் குறிப்பிடப்படுபவர்.
(அ) பிரம்மதேவர் (ஆ) வைரவமூர்த்தி (இ) சிவபிரான் (ஈ) சதாசிவன்

65. “கதிரமலை காணாத கண்ணென்ன கண்ணே கர்ப்பூரவொளி காணாக் கண்ணென்ன கண்ணே....” எனக் கதிர்காமக் கந்தனின் புகழ் குறித்து கூறியவர்.
(அ) சின்னத்தம்பிப் புலவர் (ஆ) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
(இ) சோமநாத சுந்தரர் (ஈ) நாவலியூர் சோமசுந்தரப் புலவர்

66. வைகுண்ட ஏகாதசி விரதம் எக்கடவுளைக் குறித்து அனுஷ்டிக்கப்படுகிறது.
(அ) விஷ்ணு (ஆ) சக்தி (இ) முருகன் (ஈ) விநாயகர்

67. ஈழத்தில் 'சதுர்வேதி மங்களம்', 'ஜனநாத மங்களம்' என்ற பெயர்கள் வழக்கத்தில் வந்த காலம்
(அ) அனுராதபுரக் காலம்
(ஆ) பொலனறுவைக் காலம்
(இ) ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்
(ஈ) ஐரோப்பியர் காலம்

68. "பெரியார் அவர்களது வாழ்க்கை சமய வாழ்க்கையாகும், அவரின் ஒவ்வொரு மூச்சும் சைவமுச்சாகும்' என பண்டிதமணி அவர்களால் போற்றப்பட்ட சமயப் பெரியார்.
(அ) சு.சிவபாத சுந்தரனார் (ஆ) சேர்.பொன்.இராமநாதன்
(இ) சுவாமி விபுலானந்தர் (ஈ) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுநாவலர்

69. "சதமணித்திரட்டு" என்னும் நூலை இயற்றிய புறச்சந்தானகுரவர் யார்?
(அ) மெய்கண்ட தேவர் (இ) அருணந்தி சிவாச்சாரியார்
(இ) மறைஞான சம்பந்தர் (ஈ) உமாபதி சிவாசாரியார்

70. அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை ஆகிய தோத்திரப் பாடல்கள் எத்தெய்வத்தைக் குறித்துப் பாடப்படுகின்றன.
(அ) துர்க்கை (ஆ) இலக்குமி (இ) சரஸ்வதி (ஈ) சிவபிரான்

71. திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றிய கடவுள்
(அ) மகேஸ்வரன் (ஆ) சதாசிவன் (இ) உருத்திரன் (ஈ) பிரம்மன்

72. ஆன்மா பிரார்த்த வினைப்பயன்களை அனுபவித்து முடித்த பின்னர் அது உடலைவிட்டு நீங்கும் பொழுது முத்திப்பேறு கிடைக்கும் வகையில் செய்யப்படும் தீட்சை
(அ) சத்திநோநிர்வாண தீட்சை (ஆ) ஆசாரிய அபிடேகம்
(இ) விசேட தீட்சை (ஈ) அசத்தியோநிர்வாண தீட்சை

73. "பாசத்தை நீக்கி ஞானத்தைக் கொடுப்பவர்"
(அ) குரு (ஆ) சிவனடியார் (இ) சங்கமர் (ஈ) ஆசிரியர்

74. சங்கம வழிபாட்டின் உயர்நிலையை வெளிக்காட்டி வாழ்ந்து சிறப்புப் பெற்றவர்.
(அ) சிறுத்தொண்டர் (ஆ) விறமிண்டகண்ட நாயனார்
(இ) இளையான் குடிநாயனார் (ஈ) அப்பூதியடிகள்

75. சைவசமயிகள் விலக்க வேண்டியவற்றுள் ஒன்று
(அ) சங்கம வழிபாடு (ஆ) சமூக சேவை
(இ) மாமிச போசனம் (ஈ) சித்திரைப்புத்தாண்டு

76. மனித உய்விற்க்குச் சைவநெறிக் காட்டும் இரண்டு பிரதான வழிமுறைகள்
(அ) மந்திரமும், தந்திரமும்
(ஆ) வேள்விசெய்தலும், பலியிடலும்
(இ) உயிர்கள் மீது அன்பும், கடவுள் மீது பக்தியும்
(ஈ) துறவு ஒதுங்கி வாழ்தலும்.

77. சிவநெறியாம் சைவநெறியில் நின்று வாழ்பவர்
(அ) தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவன்.
(ஆ) சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்பவர்.
(இ) சமயம் வேறு, சமூகம் வேறு எனக் கொள்வார்.
(ஈ) தாம் இன்புறுவது போல் பிறரும் இன்புறுவதை விரும்புவர்.

78. சைவசமயிகள் தாம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய முக்கிய அம்சங்கள்.
(அ) ஆடம்பரமாக உண்டு, உடுத்து வாழ்தல்.
(ஆ) பிறர் துன்பங்களை கண்டு கொள்ளாது தன்னலமே வாழ்வு என வாழ்தல்.
(இ) துறவு வாழ்க்கையைக் கடைபிடித்தல்.
(ஈ) சமய ஒழுக்கங்களையும், விழுமியங்களையும் கற்றறிந்து அதன்படி வாழ்க்கையில் வாழப்பழகுதல்.

79. 'தனித்திரு', 'பசித்திரு', 'வழித்திரு' என்னும் திருவாக்குகளைப் பிரதானமாகக் கடைப்பிடிக்க வேண்டியவர்கள்
(அ) விரதம் அனுட்டிப்போர் (ஆ) கல்வி கற்போர்
(இ) நோயாளிகள் (ஈ) வயோதிபர்

80. “உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்” எனத்தொடங்கும் திருப்பாடல்
(அ) திருமந்திரப் பாடல் (ஆ) தேவாரப் பாடல்
(இ) திருவாசகப் பாடல் (ஈ) பெரியபுராணப் பாடல்

81. தும்பிக்கையை வலப்பக்கமாகச் சுளித்து வலம்புரியாக வீற்றிருக்கும் விநாயகர்
(அ) பாலகணபதி (ஆ) தருணகணபதி
(இ) பக்திகணபதி (ஈ) சிருஷ்டிகணபதி

82. “ஏகம் சத் விப்ரா வஹுதா வதந்தி” என்ற வேத வாக்கியத்தின் உட்கிடக்கை
(அ) தெய்வம் பல என்பது (ஆ) பல்லிறைக்கடவுள் தன்மை
(இ) இயற்கை இறைத்தன்மை (ஈ) தெய்வம் ஒன்றே என்பது ஆகும்.

83. ஸ்திதி என்ற வடமொழிச் சொல்லின் கருத்து.
(அ) படைத்தல் (ஆ) காத்தல் (இ) அழித்தல் (ஈ) அருளல்

84. “பண்டு நால்வருக்கறமுரைத்தருளி” எனத் தொடங்கும் தேவாரப்பதிகம் எத்தலத்தின் மீது பாடப்பட்டது.
(அ) திருக்கேதீஸ்வரம் (ஆ) திருக்கோணேஸ்வரம்
(இ) சிதம்பரம் (ஈ) சீர்காழி

85. காத்தற் கடவுளான விஷ்ணு இராமனாக அவதரித்து இராவணனை வதம் செய்த கதையைச் சித்தரிக்கும் காவியம்
(அ) மகாபாரதம் (ஆ) சிவரகசியம்
(இ) ஆதிகாவியம் (ஈ) ஐந்தாம் வேதம்

86. சிந்துவெளி நாகரிகத்தின் புராதன நகரங்கள்
(அ) மொகஞ்சதாரோ, சீர்காழி (ஆ) மொகஞ்சதாரோ, ஹரப்பா
(இ) ஹரப்பா, சண்டிகர் (ஈ) லோத்தாள், சண்டிகார்

87. இந்து மதத்தின் சமய சிந்தனை வளர்ச்சியின் சிகரமாக விளங்குவது
(அ) பகவத்கீதை (ஆ) இராமாயணம்
(இ) ஆகமம் (ஈ) உபநிடதம்

88. நாகநாதர் என்ற சிறப்புப் பெயருடன் வீற்றிருக்கும் இறைவனின் திருத்தலம்
(அ) முன்னேஸ்வரம் (ஆ) திருக்கோணேஸ்வரம்
(இ) நகுலேஸ்வரம் (ஈ) திருக்கேதீஸ்வரம்

89. "திருத்தம்பலை" என விஜயன் இலங்கைக்கு வந்த காலத்தில் சிறப்பித்தழைக்கப் –பட்ட சிவதலம்
(அ) நகுலேச்சரம் (ஆ) திருக்கேதீஸ்வரம்
(இ) முன்னேஸ்வரம் (ஈ) திருக்கோணேஸ்வரம்

90. "திகடன்" என்ற வேடனால் போற்றி வணங்கப்பட்ட தலம்
(அ) ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம்
(ஆ) கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீச்சரம்
(இ) முன்னேஸ்வரம்
(ஈ) தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயம்

91. பூசையின் முதல் அங்கமாக அமைவது
(அ) தீபாராதனை (ஆ) நைவேத்தியம்
(இ) தூபதீப ஆராதனை (ஈ) அபிஷேகம்

92. சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர்
(அ) முன்னை நாதர் (ஆ) நாகநாதர்
(இ) சோமசுந்தரர் (ஈ) சிற்சபேசன்

93. காமம், வெகுளி, ஈயாமை (உலோபம்), மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப்பண்புகளை அழித்து தெய்வீக நிலையில் மனிதர்களுக்குப் பெருவாழ்வினை அளிக்கவல்ல விரதம்
(அ) விநாயகர் சதுர்த்தி (ஆ) திருக்கார்த்திகை விரதம்
(இ) திருவாதிரை விரதம் (ஈ) கந்தசஷ்டி விரதம்

94. காவிரி ஆற்றங்கரையில் சித்திரான்னம் உண்டு, படகோட்டம் புரிந்து கொண்டாடும் பண்டிகை
(அ) ஆடிப்பெருக்கு (ஆ) தீபாவளி
(இ) போகிப்பண்டிகை (ஈ) தைப்பொங்கல்

95. “நாமார்க்கும் குடியல்லலோம்” என்ற கூற்றினை பொழிந்தவர்
(அ) அப்பர் (ஆ) சம்பந்தர் (இ) சுந்தரர் (ஈ) மாணிவாசகர்

96. “மண் சுமந்து கூலிகொண்டக் கோவால் மொத்துண்டு புண் சுமந்த பொன்மேனி பாடுதுக்காண் அம்மானாய்” என்ற பாடலடியில் மண் சுமந்து கூலி கொண்டக் கோவால் மொத்துண்டவர் யார்?
(அ) மதுரை சோமசுந்தரப் பெருமான் (ஆ) தில்லையம்பலவாணர்
(இ) தோணி புரத்து இறைவன் (ஈ) சிற்சபேசன்

97. “இல்லக விளக்கது இருள் கெடுப்பது” என்ற தேவாரம் அமைந்துள்ள பண்
(அ) காந்தார பஞ்சமம் (ஆ) நட்டபாடை
(இ) கொல்லி (ஈ) நட்டராகம்

98. பதினோராம் திருமுறையை பாடியருளியோர் தொகை
(அ) 27 (ஆ) 12 (இ) 10 (ஈ) 14

99. சார்ந்ததன் வண்ணம் உள்ள பொருள்
(அ) பதி (ஆ) பசு (இ) பாசம் (ஈ) அசத்து

100. “பெருமாக்கோதையார்” எனச் சிறப்பித்தழைக்கப்படுபவர்
(அ) சேக்கிழார் (ஆ) சுந்தரர்
(இ) மாணிக்கவாசகர் (ஈ) சேரமான் பெருமாள்

101. சுவர், திரைச்சீலை, காகிதம் முதலியவற்றில் புடைப்பின்றித் தீட்டப்படும் ஓவியங்கள்
(அ) புடைப்புச் சிற்பம் (ஆ) சித்திரம்
(இ) சித்தார்த்தம் (ஈ) சித்ராபாசம்

102. சித்திரைப் பரணி, ஐப்பசி பரணி ஆகிய விரதங்கள் எக்கடவுளைக் குறித்து அனுட்டிக்கப்படுகிறது.
(அ) ஐயனார் (ஆ) வீரபத்திரர்
(இ) முருகன் (ஈ) வைரவர்

103. சக்தி பீடங்கள் அறுபத்தி நான்கில் "புவனேஸ்வரி பீடம்" எனச் சிறப்பித்தழைக்கப்படும் சக்தி தலம்
(அ) மாத்தளை முத்துமாரியம்மன்
(ஆ) தெல்லிப்பளை துர்க்கையம்மன்
(இ) நயினை நாகபூஷணி அம்மன்
(ஈ) திருகோணமலை பத்திரகாளியம்மன்

104. இலங்கையில் முதன் முதலாக பெரிய கோபுரம் அமைக்கப்பட்ட தலம் எது?
(அ) மாவிட்டபுரம் (ஆ) நல்லூர்
(இ) கட்டுக்கலை செல்வவிநாயகர் (ஈ) திருக்கோணேச்சரம்

105. பதின்மூன்று சருக்கங்களையும், 4286 பாடல்களையும் கொண்டமைந்த சைவ இலக்கியம்
(அ) பெரியபுராணம் (ஆ) கந்தபுராணம் (இ) இராமாயணம் (ஈ) மகாபாரதம்

106. "ஆளுடைய நம்பி புராணம்" எனச் சிறப்பிக்கப்படும் நூல் எது?
(அ) பெரியபுராணம் (ஆ) மகாபாரதம்
(இ) கந்தபுராணம் (ஈ) பகவத்கீதை

107. "உந்திபற" என்ற சொற்றொடர் கொண்டு முடிகின்ற மெய்கண்ட சாஸ்திர நூல்
(அ) கொடிக்கவி (ஆ) திருவருட்பயன்
(இ) திருக்களிற்றுப்படியார் (ஈ) திருவுந்தியார்

108. திரு வகுப்பு, வேல் விருத்தம் ஆகிய நூற்களின் ஆசிரியர்
(அ) அருணகிரிநாதர் (ஆ) கச்சியப்ப சிவாச்சாரியார்
(இ) நாவலர் (ஈ) சம்பந்தர்

109. "சிவநகர்" என்ற பெயர் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்ட இடம்
(அ) சிங்கை நகர் (ஆ) பலாங்கொடை
(இ) உறுகுணைத் தேசிய பூங்கா (ஈ) யாலை தேசிய பூங்கா

110. நல்லூர் ஆலயத்தை அமைத்த மன்னன்

(அ) கலிங்கமாகன் (ஆ) குளக்கோட்டன்

(இ) செகராசசேகரன்

(ஈ) செண்பகப் பெருமாள் என்றழைக்கப்படும் 6வது புவனேகபாகு

111. பஞ்சத்தால் வாடிய மக்களின் பசிப்பிணியைப் போக்கக் கஞ்சித் தொட்டித் தருமம் செய்த சமயப் பெரியார்

(அ) சுவாமி விபுலானந்தர் (ஆ) சு.சிவபாத சுந்தரனார்

(இ) சேர்.பொன்.இராமநாதன் (ஈ) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

112. "முத்தியானந்தர்" என்னும் தீட்சா நாமத்துக்குரிய ஈழத்து ஞானியர் யார்?

(அ) கடையிற் சுவாமிகள் (ஆ) செல்லப்பா சுவாமிகள்

(இ) யோகர் சுவாமிகள் (ஈ) சிவாக்கியர்

113. "பட்டகட்டையிற் பகற் குருடு போகின்றது" என்ற கூற்றினைக் கூறிய புறச்சந்தான குரவர் யார்?

(அ) மெய்கண்ட தேவர் (ஆ) மறைஞான சம்பந்தர்

(இ) அருணந்திச் சிவாச்சாரியார் (ஈ) உமாபதிச் சிவாச்சாரியார்

114. ஆணவம், கன்மம், எனும் இரு மலத்தையுடைய ஆன்மாக்கள்

(அ) விஞ்ஞானகலர் (ஆ) பிரளயாகலர்

(இ) ஒரு மலத்தார் (ஈ) சகலர்

115. "சிவாய நம" என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை என்ற பாடல் அமைந்த நூல்

(அ) திருக்குறள் (ஆ) நல்வழி

(இ) மூதுரை (ஈ) பெரியபுராணம்

116. நிர்வாண தீட்சை பெற்ற ஒருவர் குருப்பட்டத் தரிப்பதற்காகச் செய்யப்படும் கிரியை

(அ) சமய தீட்சை (ஆ) விசேட தீட்சை

(இ) நிர்வாண தீட்சை (ஈ) ஆசாரிய அபிடேகம்

117. முருகப் பெருமான் "திகடசக்கரம்" என அடியெடுத்துக் கொடுத்துப் பாடப்பட்ட நூல் எது?

(அ) பெரியபுராணம் (ஆ) கந்தபுராணம்

(இ) திருவிளையாடற் புராணம் (ஈ) தேவாரம்

118. சைவ ஒழுக்கத்தைப் பின்பற்றுவோர் கடைப்பிடிக்க வேண்டியவை

(அ) மாமிசமும், மதுபானமும் அருந்துதல்.

(ஆ) வயிறு புடைக்க உண்டும், ஆடம்பரமாக உடுத்தும் வாழுதல்.

(இ) நித்திய கருமங்களை கடைப்பிடிக்காது வாழுதல்.

(ஈ) நித்திய கருமங்களைக் கடைப்பிடித்தும், சிவசின்னங்களைத் தரித்தும் வாழுதல்.

119. "பலரைப்புணர்ந்து மிருட் பாவைக்குண்(டு) என்றும் கணவர்க்குந் தோன்றாத கற்பு" என்ற திருவருட்பயன் பாடலில் "பலரைப் புணர்ந்து மிருட் பாவை" எனக் குறிப்பிடப்படும் மலம்

(அ) ஆணவம் (ஆ) ஆகந்துவமலம்

(இ) கன்மம் (ஈ) மாயை

120. திருமந்திர மாலை எனவும், சுந்தனாகமம் எனவும் சிறப்பிக்கப்படும் திருமந்திரத்தைச் செய்தருளியவர்

(அ) திருமூலர் (ஆ) நம்பியாண்டார் நம்பி

(இ) சேந்தனார் (ஈ) திருமாளிகைத் தேவர்

**************

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01.- ஈ | 08.- ஆ | 15.- அ | 22.- ஈ |
| 02.- ஈ | 09.- அ | 16.- இ | 23.- அ |
| 03.- ஆ | 10.- ஆ | 17.- அ | 24.- இ |
| 04.- ஆ | 11.- ஈ | 18.- இ | 25.- ஈ |
| 05.- அ | 12.- இ | 19.- ஈ | 26.- ஈ |
| 06.- ஈ | 13.- அ | 20.- ஆ | 27.- அ |
| 07.- அ | 14.- ஆ | 21.- ஆ | 28.- ஈ |

| | | | |
|---|---|---|---|
| 29.- அ | 52.- இ | 75.- இ | 98.- ஆ |
| 30.- ஈ | 53.- ஆ | 76.- இ | 99.- ஆ |
| 31.- இ | 54.- ஈ | 77.- ஈ | 100.- ஈ |
| 32.- இ | 55.- அ | 78.- ஈ | 101.- ஈ |
| 33.- இ | 56.- ஆ | 79.- அ | 102.- ஈ |
| 34.- அ | 57.- இ | 80.- அ | 103.- இ |
| 35.- இ | 58.- ஆ | 81.- ஈ | 104.- அ |
| 36.- ஈ | 59.- ஆ | 82.- ஈ | 105.- அ |
| 37.- ஆ | 60.- ஈ | 83.- ஆ | 106.- அ |
| 38.- அ | 61.- ஈ | 84.- அ | 107.- ஈ |
| 39.- அ | 62.- இ | 85.- இ | 108.- அ |
| 40.- ஈ | 63.- ஈ | 86.- ஆ | 109.- இ |
| 41.- அ | 64.- அ | 87.- ஈ | 110.- ஈ |
| 42.- ஆ | 65.- ஈ | 88.- ஈ | 111.- ஈ |
| 43.- ஈ | 66.- அ | 89.- அ | 112.- அ |
| 44.- ஈ | 67.- ஆ | 90.- ஆ | 113.- ஆ |
| 45.- அ | 68.- அ | 91.- ஈ | 114.- ஆ |
| 46.- ஈ | 69.- இ | 92.- ஈ | 115.- ஆ |
| 47.- ஈ | 70.- இ | 93.- ஈ | 116.- ஈ |
| 48.- இ | 71.- ஈ | 94.- அ | 117.- ஆ |
| 49.- ஈ | 72.- ஈ | 95.- அ | 118.- ஈ |
| 50.- அ | 73.- அ | 96.- அ | 119.- அ |
| 51.- ஆ | 74.- ஆ | 97.- இ | 120.- அ |

**அறிவொளி மலர் அடுத்த வெளியீடு**
**01.09.2003**

சைவ முன்னேற்றச் சங்க பிரசாரப்பிரிவு



வத்துகாமம்

RaguRaam's
No: 416, Main Street, Matale.